2009 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுடைய இந்த முறையீடு உரிய நேரத்தில் கவனிக்கப்பட்டு, உடனடியாக அவருக்கு அறிவிக்கப்படும்.

(ஆ) திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27-1-2007 அன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதே அவையிலே திருப்பூர் சாயக்கழிவுப் பிரச்சினைக்கு 700 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அறிவித்து, இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அதற்கென்று பால்கிருஷ்ணன் கமிட்டி என்று ஒரு கமிட்டியைப் போட்டார்கள். அந்தக் குழுவின் அறிக்கை அரசுக்கு வரப்பெற்றுள்ளதா? திருப்பூர் சாயக்கழிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதுகுறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசுகிறபோது, மத்திய அரசினுடைய உதவியோடு திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன என்கின்ற செய்தியைப் பதிவு செய்தார்கள். அது குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விழைகிறேன். இது சாதாரண பிரச்சினை அல்ல; 25 இலட்சம் தொழிலாளர்களுடைய பிரச்சினை; பல இலட்சம் விவசாயிகளுடைய பிரச்சினை. இதற்குக் கண்டிப்பாக ஒரு நிரந்தரத் தீர்வை மத்திய அரசு உதவியோடு ஏற்படுத்தித் தந்து, மேற்கு மாவட்ட மக்களைக் காத்து, ஜவுளித் தொழிலையும், விவசாயத்தையும் காப்பதற்கு ஒரு நல்ல அறிவிப்பை இன்றைக்கு வெளியிட்டு, கொங்கு மண்டலத்தை வாழ வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

[2009 ஜூலை 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாயப் பட்டறை பிரச்சினையை, அந்தப் பகுதி மக்கள் பயன் அடைகின்ற அளவிற்கு, அதேபோல, பாதிக்கப்படாத அளவிற்குச் சரி செய்வதற்கு ஒரு தொகை கோரப்பட்டு, அந்தத் தொகையைப் பகிர்ந்து கொடுக்கின்ற முயற்சியில் ஆலை முதலாளிகள் யாரும் இன்னும் ஈடுபடவில்லை. அவர்கள் ஈடுபட்டு, அந்த முயற்சியை மேலும் ஊக்கப்படுத்துவார்களேயானால், அது அவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும், அந்தப் பகுதி மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும். அதற்கான பணிகளில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 9–55

(இ) விவசாயத்திற்கு நாளொன்றுக்குப் பதினாறு மணி நேரம் மின்சாரம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.*

திரு. கு. பாண்டுரங்கன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அபரிமிதமாகப் பொழிய வேண்டிய தென்மேற்குப் பருவமழை இந்த ஆண்டு தமிழகத்தில் தாமதமாகத் தொடங்கி, ஆண்டு சராசரியைவிட 23 சதவிகிதம் குறைவாகப் பொழியும் என மத்திய அரசு செய்தி வெளியிட்டுள்ளது.*

தொண்டை மண்டல வேளாண் பெருமக்கள் வாழ்வில் தேனாறாக ஓடும் பாலாறுகூட, பக்கத்து மாநிலத்தின் பாதகத்தால் பறிபோய்விடும்போல இருக்கிறது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் நீராதாரமின்றி நிர்க்கதியாக நிற்கும் தொண்டை மண்டல விவசாயிகளுக்குத் துணை நின்று கைகொடுப்பது, கிணற்று நீர்ப் பாசனம்தான். இதற்கும் போதுமான நேரம் மின்சாரம் இருக்க வேண்டும். நெல் சாகுபடி என்பது தமிழகம் முழுவதும் நடைபெறுகிறது. இதைக் கருத்தில்கொண்டு, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு வழங்கிக்கொண்டிருப்பதைப்போல, தொண்டை மண்டலம் உள்ளிட்ட தமிழகம் முழுமைக்கும் வேளாண் பெருமக்களுக்கு 16 மணி நேரம்